# தம்பிராசா சுபத்திரன்

## றொபேட் தோழர்



25.12.1957 - 14.06.2003

தமிழ் சமூகத்தினுள் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்காகவும், இனங்களின் சமத்துவம் தமிழ், சிங்களம், முஸ்லீம் மக்களின் ஐக்கியம் பாரபட்சமற்ற, ஏற்றத்தாழ்வில்லாத சமூக அமைப்பு அவரின் அக்கறைக்குரிய விடயங்களாக இருந்தன.

சாதாரண தனி மனிதனின் தேவைகளில் இருந்து சமூகத் தேவைகள் வரை அவர் கரிசனை கொண்டிருந்தார். அமைதியும், எளிமையும், ஆளுமையும் அவரின் உயர்ந்த பண்புகள். எப்போதும் மலர்ந்த முகத்துடன் காணப்படுவார். பிரச்சினைகள் சவால்களைக் கண்டு அவர் அஞ்சுவதில்லை. துன்ப சாகரத்தின் அடியாழத்தில் வீழ்ந்து கிடந்தாலும் எழுந்து நிற்பதற்காக போராடுவார். நம்பிக்கைகள் ஒரேயடியாக தகர்ந்து போனாலும் அந்த நம்பிக்கை கீற்றை உருவாக்க பாடுபடுவார். கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும். நம்பியவர்களை நட்டாற்றில் விடக்கூடாது என்ற முன்மாதிரிகளை நாம் அவரிடமிருந்து கற்க வேண்டும். மலர்ந்த முகத்துடன் செயலாற்றும் றொபேட் தோழருக்கு கோபமும் வரும், ஆனால் அது சத்திய ஆவேசத்துடன், சமூக தார்மீக உணர்வுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். சோம்பி, துவண்டு போவது அவருக்கு அறவே பிடிக்காது. ஒவ்வொரு அதிகாலை பொழுதிலும் அவர் புத்தம்புது மனிதனாய் நின்று கொண்டிருப்பார்.

ஈ.பி.ஆர்.எல்.எப் இன் மாணவர் அமைப்பான ஈழ மாணவர் பொது மன்றத்திலிருந்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கடந்தகால வரலாற்றின் அரசியல், ஆயுத அமைப்பின் தலைவர்களில் ஒருவராக இருந்து சிறைச்சாலை, சித்திரவதை வடக்கு கிழக்கின் நீள அகலம் இந்தியாவில் எம் மக்கள் தஞ்சமடைந்த அகதி முகாம்கள், நவீன திரைப்படங்கள், கலை இலக்கிய நிகழ்ச்சிகள், நாடக பட்டறைகள், எங்கும் அவர் காணப்பட்டார். சமூகத்தின் தாங்கொணா துயரத்தை அவர் ஆழமாக கிரகித்தார். மனித வாழ்வின் உன்னதத்தை அவர் நேசித்தார். அவரது மனமும், அவரது உருவமும் ஆளுமை படைத்தவை காந்த சக்தி வாய்ந்தவை. தான் இந்த சமூகத்தின் மீது வைத்திருக்கும் அன்பையும் தோழர்கள் மீது வைத்திருக்கும் நேசத்தையும் பறையறைந்து தெரிவிப்பவரல்ல. அவரது மனம் அமைதியாக ஓடும் ஆற்றைப் போன்றது. அது சில சந்தர்ப்பங்களில் பிரவாகமாகவும் மாறும். சமூகத்தில் மனிதர்களுடன் கண்ணியமாக நற்பண்புடன் உறவாடினார். மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை மதித்தார். அவர்களது கருத்துக்கள் மீது, அவர்களின் நம்பிக்கைகள் மீது ஆக்கிரமிப்பை திணிக்கும் போக்கு அவரிடம் இருக்கவில்லை.

அவர் ஜனநாயக உள்ளூராட்சி நிறுவனம் என்றவகையில் யாழ் மாநகர சபையில் அங்கத்தவராக செயற்பட்டபோது எமது சமூகத்தில் “வறுமையில் செம்மையாக வாழ்தல்” என்பார்களே அப்படி அவர் நடந்து காட்டினார்.

1980 இல் பேரினவாதத்தால் எரியுண்ட நூலகத்தை மறுநிர்மாணம் செய்வதில் மாநகரசபையின் ஏனைய உறுப்பினர்களுடன் சேர்ந்து தனது பங்களிப்பை அவர் செய்தார். அங்கு மாநகர சபையில் எவ்வாறு கருத்துக்களை முன்வைப்பது, எவ்வாறு வெவ்வேறு கருத்து நிலைகளை எதிர்கொள்வது, எவ்வாறு அறிக்கைகளை விடுப்பது என்பதில் அவர் ஒரு பாசிச சூழலில் பல பண்பாட்டு விழுமியங்களை தனது நடைமுறையினூடாக வெளிக்கொணர்ந்தார். மாநகர சபை உறுப்பினர்கள் அனைவருமே கட்சிகள், கொள்கைகள், வேறுபாடுகளுக்கு அப்பால் அவரை பெரிதும் நேசித்தனர்.

தமிழ் ஊடகங்கள் ஏற்கனவே புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு சென்றுவிட்டன. ஆனால் அவருடன் பழகிய பெருமளவு ஊடகவியலாளர்கள் அவரில் அலாதிப் பிரியம் வைத்திருந்தனர். சமூகத்தில் அவருடன் பழகிய மனிதர்களிடையே ஆகர்ஷிப்பை ஏற்படுத்தியிருந்தார். அவருடைய ஆளுமையும் கண்ணியமும் தர்க்கம் நிறைந்த நிதானமான கலந்துரையாடலும் பெரும் ஆகர்சிப்பாக அமைந்திருந்தது.

அவருடைய சொந்த கிராமமான சாவக்கச்சேரி நுணாவிலிலும் சரி, அயல் கிராமங்களிலும் சரி பல முதியவர்கள் “சுபா எங்கட பிள்ள” என்று வாஞ்சையுடன் அழைத்துக் கொள்வார்கள்.

அவர் பொது வாழ்விற்கு வரமுன்னர் சாவகச்சேரி, யாழ் மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கற்றபோது அவருக்கு பாலிய வயதிலிருந்தே ஏராளமான நண்பர்கள் இருந்தார்கள். அவருடைய நண்பர்கள் பலர் பிற்கால கட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் இல் இணைந்திருந்தார்கள். அவர்களில் பலர் மறைந்தும் விட்டார்கள்.

நேரடியாக ஈ.பி.ஆர்.எல்.எப் சமூகத்தில் பணியாற்ற முடிந்த அப் பொற்காலத்தில் அவர் மக்களை அணிதிரட்டுவதில் மாபெரும் வீச்சைக் காட்டினார்.

தமிழ் சமூகத்தினுள் உருவாகிவந்த உன்னதமான தலைவர்கள் இந்த சமூகத்தினுள் நன்கு பரிச்சயப்படுவதற்கு முன்னரே படுகொலை செய்யப்பட்டார்கள். தமிழ் சமூக சூழலில் உருவாகிய ஒரு சிறந்த தலைமைப் பண்பு வாய்ந்த தோழர் அவர்.

அவருக்கு தனிப்பட்ட முறையில் ஏராளம் சோகங்கள் இருந்தன. அவற்றை எப்போதும் வெளிக்காட்டியதில்லை.

1990களின் முற்பகுதியில் அவரது தந்தையார் தம்பிராஜா அவர்களை வீட்டிலிருந்து பலவந்தமாக தமிழ் பாசிஸ்டுக்கள் பிடித்துச் சென்றார்கள். அவருக்கு என்ன நேர்ந்தது என்பது இன்றுவரை தெரியாது. பாசிஸ்டுக்களின் வதைமுகாம் ஒன்றில் அவர் கொல்லப்பட்டிருப்பார். அவருடைய தாயார் ரத்தினம்மா ஒரு தைரியமும் துணிவும்மிக்க மனுஷி. தோழர் றொபேட்டின் தந்தையாரை பிடித்துச் சென்றபோது அவர் கொலைஞர்களுடன் அந்த முதிய வயதிலும் பெரும் போராட்டம் நடத்தினார். புலிகளை வெளிப்படையாக விமர்சிப்பதில் அவருக்கு எந்த அச்சமும் இருந்ததில்லை. றொபேட் தோழரின் தந்தையாரை கடத்தி உடைமைகளை அபகரிக்க முயன்றபோது ஊரவர்களை அழைத்து ''இதை நீ வைத்துக்கொள். இவங்களுக்கு ஒன்றும் போகக்கூடாது'' என்று சொன்னவர்.

நுணாவில் கிராமத்தில் றொபேட் தோழரின் தாயாரின் குரல் ஓங்கி ஒலித்தது. இது தமிழ் பாசிஸ்டுக்களுக்கு நெருடலாக இருந்தது. றொபேட் தோழரின் தாயாரை கடத்தி அவரை கோப்பாயில் சிறை வைத்து, அவரைப் போன்று பலரை வள்ளமொன்றில் ஏற்றி புலிகள் இந்தியாவிற்கு பலவந்தமாக அனுப்பினார்கள்.

றொபேட் தோழர் 1980 களின் நடுப்பகுதியில் அரச படைகளினால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் ஒரு வருடத்தின் பின் வெலிகடை சிறைக்கு வந்தபோது அங்கிருந்த பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த அங்கத்தவர்கள் மற்றும் தனிப்பட்டமனிதர்களுடன் மிகுந்த நட்புறவுடன் பழகினார். ஒரு ஈர்ப்பு அவரிடம் இருந்தது. சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளின் உரிமைகள் தொடர்பான போராட்டங்களில் அவர் ஈடுபட்டார். 15, 20 நாட்கள் வரையிலான உண்ணாவிரதங்களிலும் தன்னை அர்ப்பணித்திருந்தார்.

றொபேட் தோழர் சிறையில் இருக்கும் போது அவருடைய பெற்றோர் அவரை பார்வையிட வருவார்கள். அவர் தனது பெற்றோருக்கு ஒரேயொரு ஆண் பிள்ளை. றொபேட் தோழருக்கு விசிட் வருகிறதென்றால் வெலிகடை சிறையில் உள்ள அரசியல் கைதிகள் கப்பல் வந்திருக்கிறதடா என்று மகிழ்ச்சியுடனும் நகைச்சுவையுடனும் கூறுவார்கள். றொபட் தோழரின் பெற்றோர் அநேகம் பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததனால் பெரிய உணவுப் பொட்டலங்களை கொண்டு வருவார்கள். றொபேட்தோழர் ஓரிருவார்த்தைகளில் புரையேறுமளவிற்கு மற்றவர்களை சிரிக்க வைத்தது விடுவார். நகைச்சுவை உணர்வு கொண்ட மனிதர்.

இன்று உலகம் பூராவும் வாழும் அவருடன் சிறையில் வாழ்ந்த சகாக்களும் அவருடைய சிறுவயது நண்பர்களும் அவருடைய கட்சித் தோழர்கள், ஊரவர்கள் அவரின் சேவையை உணர்ந்த மக்கள் அவர் மீது பெருமதிப்பு வைத்திருக்கிறார்கள்.

ஒரு மனிதன் இந்த உலகில் பிறந்தவன், எப்படி வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர். பாரதியை அவர் மிகவும் வியப்பார். இவ்வளவு கவிதைகளை எழுதி வைத்துவிட்டு சின்ன வயதிலேயே பாரதி மரணித்துப் போனதை அவர் அடிக்கடி குறிப்பிடுவார். யாழ்ப்பாணத்தில் புழக்கத்திலுள்ள பல வாய்மொழி மற்றும் பழமொழிகள் அவருக்கு அத்துப்படியாக இருந்தன. அவர் அந்த விஷயத்தில் ஒரு கலை களஞ்சியமாகவே திகழ்ந்தார்.

அவர் சமூக அரசியல் வாழ்வில் நேரடியாக பிரவேசிக்க முன்னரே ஜெயகாந்தனின் எழுத்துக்களையும், ரகுநாதன், பொன்னீலன், ஜானகிராமன் போன்றவர்களின் எழுத்துக்களையும் பெருமளவு வாசித்து விட்டார்.

1917ம் ஆண்டு ரஷ்ய புரட்சி பற்றி அங்கு சென்று நேரடியாக அவதானித்து எழுதிய ஜோன் ரீட் இன் உலகை குலுக்கிய பத்து நாட்கள் என்ற புத்தகத்தை ஏற்கனவே அவர் வாசித்திருந்தார். அப்போது நியூ செஞ்சரி புக் கவுசின் மொழி பெயர்ப்பாக அது வெளிவந்திருந்தது. பின்னர் தாய், வீரம் விளைந்தது, இயக்கவியல் பொருள்முதல்வாதம், வரலாற்று பொருள்முதல்வாதம், மார்க்சின் அரசியல் பொருள்முதல்வாதம் என அவர் வாசிப்பை மேற்கொண்டார். மல்லிகை மற்றும் சிறு சஞ்சிகைகள் ஈழத்துச் சிறுகதைகள் எனவும் அவர் வாசித்தார். சினிமா, கவிதை, சிறுகதை, நாவல்கள், பற்றி அவரின் விமர்சனங்கள் மிகவும் கூரிய துல்லிய பார்வை கொண்டவை. வியக்க வைப்பவை. இவற்றை ஒரு நாளும் அவர் எழுதியதில்லை. அவர் எழுதியிருந்தால் அவர் மாபெரும் இலக்கிய படைப்பாளியாகவும் இருந்திருக்கக்கூடும். ஆனால் வாழ்க்கை அனுபவத்தில், போராட்டத்தில் அவர் நேரடியாக ஈடுபட்டிருந்ததனால், கெடுபிடியான சூழலில் ஓய்வொழிச்சலின்றி செயற்பட்டதனால் எழுத வேண்டும் என்ற அவரின் பேரார்வத்தை பூர்த்தி செய்ய முடியவில்லை. நள்ளிரவுகளிலும் தான் நீட்டி நிமிர்ந்து படுப்பதில்லை. அரை தூக்கத்தில் கதிரையில் இருந்து கொண்டிருப்பார். நள்ளிரவு உலக வானொலிகளில் ஆங்கிலத்திலோ, தமிழிலோ செய்திகள் போய் கொண்டிருக்கும்.

இராணுவமயப்பட்ட கட்டுப்பாடுகளை அவர் ஏற்றுக் கொண்டதில்லை. ஆனால் காரியங்கள் நேர்த்தியாக நடைபெற வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். போராட்டங்களாயினும் சரி, தேர்தல் பிரச்சாரங்களாயினும்சரி அவருடைய கை வண்ணத்தின் நேர்த்தியை அவதானிக்கலாம். இந்தியாவிற்கு சென்றால் அங்கு நாங்கள் தஞ்சமடைந்தபோது அரசியல் ரீதியிலும் மனிதாபிமான ரீதியிலும் எங்களுக்கு உதவி செய்த நண்பர்களை, தோழர்களை ஆதரவாளர்களை அவர் சந்திக்க தவறுவதில்லை.

ஓய்வொழிச்சலின்றி உழைத்த றொபேட் தோழர் தனது 45வது வயதில் தமிழ் பாசிப் புலிகளினால் நயவஞ்சகமாக காவுகொள்ளப்பட்டார். றொபட் தோழர் என்பது எமது சமூகத்தின் மனச்சாட்சி.

இன்று சூரியதேவன் துதிபாடும் குப்பை பிரச்சார எழுத்துக்கள் சொற்கள் எல்லாம் மனிதகுல முன்னேற்றம் என்ற காலச்சுழியில் அள்ளுண்டு போகும். எமது றொபேட் தோழர் வரலாற்றின் தோள்களில் சுமந்து வரப்படுவார். பொலிவிய காடுகளில் பாசிஸ்டுக்களால் புதைக்கப்பட்ட சேகுவேராவை கியூபாவின் மக்கள் சுமந்து வந்தது போல.

**அதுவரை தோழரே! ஓய்வொழிச்சலின்றி உழைத்த தோழரே அமைதியாக உறங்குங்கள்.**

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபா (EPRLF-P)**